**தலைப்பு 203 – கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் மீண்டெழும் 01 செலவு விடயம் மற்றும் மூலதன செலவு விடயம் 01 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 100,000 ஆன மொத்த தேறிய ஒதுக்கம் மற்றும் 15 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 03 மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஒதுக்கங்களில் ரூபா 10,587,154 அதாவது நூற்றுக்கு 16 வீதத்திலிருந்து நூற்றுக்கு 92 வீதம் வரையிலான வீச்சில் அதற்கான ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | புத்தசாசன அமைச்சின் 2020 மே 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட உள்ளகச் செலவு முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 01/2020 ஆம் இலக்கத்தின் பிரகாரம் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள் குறைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பெறப்படுகின்ற ஒதுக்கங்கள் குறிப்பிட்ட கருமங்களுக்கு செலவிடப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கங்களின் அளவை விடக் கூடியதாக எவ்வித செலவுகளோ பொறுப்புக்களோ ஏற்படுத்த முடியாத போதிலும் 01 செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கத்தில் ரூபா 48,000 ஆன மிகுதியை விஞ்சியதாக ரூபா 350,000 வரையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் 03 இடைக்காலக் கட்டுநிதி கணக்குகளின் மூலம் செலவு முகாமைத்துவத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்ட காரணத்தினால் திசெம்பர் மாதத்திற்காக ஒதுக்கம் சேமிக்கப்பட்ட போது தவறு ஒன்று ஏற்பட்டதுடன் எதிர்வரும் காலங்களில் ஒதுக்கங்களின் அளவின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒதுக்கத்தை விட விஞ்சியதாக செலவு அல்லது பொறுப்புக்கள் ஏற்படுத்த முடியாமை. |
| (ஆ) | கடந்த வருடங்களில் கணக்கிடப்பட்ட கடப்பாடுகளுக்காக ரூபா 13,429 ஆனது 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 இன் பொறுப்புக்கள் பதிவேட்டில் அச்செலவுகள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | அச்செலவு பொறுப்புக்கள் பதிவேட்டில் செலவாகக் குறிப்பிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் பதிவேட்டில் பதியப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 134(3) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும். | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 106 மற்றும் 113 | விபத்துக்குள்ளாகி 5 வருடங்களுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கான ரூபா 1,000,000 மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 வருடங்களுக்கு மேற்பட்ட சீருடை இருப்பிற்கான ரூபா 247,250 ஆன இழப்புக்கள் | வான் வாகனத்திற்கான காப்புறுதியினால் அறவிடப்படாத தொகையைப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்காக நி.பி 109 படிவமொன்று அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த துடன் சீருடைகளுக்கான இழப்புக்கள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு அல்லது பதிவழிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 102(உ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இரண்டு வாகனங்களில் ஏற்பட்ட விபத்துக்களுக்கான முறையே ரூபா 137,706 மற்றும் ரூபா 22,600 ஆன நட்ட இழப்பு / சேதம் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நி.பி 104(4) இன் கீழ் இறுதிப் பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இழப்பு / சேதத்திற்கான பதிவேட்டில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 3. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 66 என்ற போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 50 என்பதனால் 16 அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்கான குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம் பதில் கடமை நியமனம் செய்யப்படுதலானது நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிகத் தீர்வாக மட்டுமே என்பதுடன் பதவிக்கு முழுநேர அதிகாரி ஒருவரின் சேவைகள் தேவைப்பட்டால், நிரந்தர நியமனம் உடனடியாக செய்யப்பட வேண்டிய போதிலும் வெற்றிடமான | இது அமைச்சரவையின் அங்கீகாரம் தேவைப்படுகின்ற பதவி என்பதனால் பணிப்பாளர் பதவியில் வெற்றிடத்தை நிரப்புதலானது திணைக்களத்தின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன். | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிரந்தர நியமனமொன்று செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் 2018 ஆகஸ்ட் 01 இலிருந்து 2020 சனவரி 08 ஆந் திகதி வரை கடமையை நிறைவேற்றும் அடிப்படையில் 2020 சனவரி 09 இலிருந்து 2021 ஏப்ரல் வரையில் பதில் கடமை அடிப்படையில் தொடர்ந்தும் கடமைகளை மேற்கொண்டிருந்ததுடன் அதற்காக நிரந்தர நியமனம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட சாரதிகள் பதவிகள் 02 காணப்பட்டதுடன் ஒரு பதவி 2020 சனவரி 28 இலிருந்து வெற்றிடமாக இருந்தது. இதன் காரணமாக திணைக்களத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்களில் ஒன்று அத்திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2017/04 ஆம் இலக்கத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கும் பதவியணியினரின் அறிக்கையில் மேற்கண்ட சாரதிப் பதவிக்கான வெற்றிடம் இருப்பதாக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு குறிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. | சாரதிப் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |